செயல்படுகின்றன. எனவே அதில் எந்தவிதமான குறைபாடும் இல்லே. பழைய வங்கிகளில்தான் இந்தக் குறைபாடு இருக்கும். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஊரில் இருப்பது பழைய வங்கி என்று நினேக்கிறேன். அவர்கள் சட்டத்தைத் திருத்திக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். திரு. சி. வி. ராஜகோபால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நில வள வங்கிகளில் ஏராளமாக, 8 கோடி ரூபாய் வரை யாரும் வாங்குவார் இல்லாமல் இருப்பதாகக் குறிப்பிட்டார்கள். இப்போது நிலம் வாங்க 50 சதவீதம் கட்டக் கூட பணம் இல்லாமல் திகைப்பவர் களுக்கு இந்த வங்கிகள் மூலம் கடன் கொடுப்பதற்கு ஏற்ற வகையில் புதிய சட்டத்தைத் திருத்த முன்வருவாரா என்று அறிய விரும்புகி றேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது நில வள வங்கியே தவிர நிலவாங்கி வங்கியல்ல.

திரு வி. தங்கபாண்டியன் : தலேவர் அவர்களே, நிலவள வங்கி மூலமாக முன் கடன் தீர்க்க, கடன் கொடுக்கும்படி தாக்கீது இருந் தாலும், பல நிலவள வங்கிகளுக்கு அந்த உத்திரவு வராத காரணத் தால், அவைகள் செயல்படாமல் இருக்கின்றன. அதே போல் நில அபிவிருத்திக்காக வாங்கிய கடன் குறித்து குறிப்பாக இராமநாதபுரம், மதுரை போன்ற மாவட்டங்களில் வருகிற ஏராளமான மனுக்களுக்குப் பணம் கொடுப்பதில் அதிகாரிகள் ஒத்துழைக்காமல் இருப்பதை அரசு ஆராய்ந்து, அவர்கள் ஒத்துழைக்கும்படி அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இராமநாதபுரம் மாவட் டத்திலிருந்து மாநில நில வள வங்கிக்குச் சில உறுப்பினர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களே இதைத் திருத்திக்கொள்ள முடியும். மாநில நிலவள வங்கியின் இயக்குனர் மூலமாக இதை அவர் களே செய்துகொள்ள முடியும். அரசாங்கத்தின் குறுக்கீடு இல்லாமலே செய்ய முடியும்.

*Art Gallery, Thanjavur*

*19. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) the value of idols in the Art Gallery, Thanjavur ; and

(*b*) how they are being protected at present ?

**தஞ்சைக் கலேப்பொருட்களஞ்சியம்**

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விளுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தஞ்சைக் கலேப்பொருட் களஞ்சியத்திலுள்ள விக்கிரகங்களின் மதிப்பு யாது ?

(இ) தற்போது அவை எவ்வாறு பாதுகாக்கப்பட்டு வருகின்றன?

[28th November 1970

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) வெண்கலத்தால் ஆன காட்சிப் பொருள்களின் தோராய அங்காடி மதிப்பு ரூ. 48,45,000 ஆகும். கற்களால் ஆன சிற்பங்களின் தோராய அங்காடி மதிப்பு ரூ. 6,10,000 ஆகும்.

(இ) காட்சிப் பொருள்கள், கலைக்கூட நிறுவனத்தால் நியமிக்கப் பட்டுள்ள ஆறு காவலாட்களால் பாதுகாக்கப்பட்டு காப்பாளர் மற்றும் அவரது உதவியாளர்களால் மேற்பார்வையிடப்பட்டு வருகின்றன. ஆறு காவலர்களில் மூவர் இரவு நேரங்களில் காவல் புரிவதற்காக அனுப்பப்படுகின்றனர். தற்போதைய காப்பு நடவடிக்கைகளை வலுப் படுத்தும் நோக்கத்துடன் ஒவ்வொரு நாளும் காவல்துறையைச் சேர்ந்த ஒரு காவலர் இரவு பணிக்காக இரவு 11 மணி முதல் காலை 5 மணி வரை நியமிக்கப்பட்டு வருகிறார். இரவு நேரங்களில் கலைக்கூடத்தில் காவலர் பாதுகாப்பு வழங்குவதற்கான நிலை ஆணை இல்லாத போதிலும் மாவட்ட ஆட்சியாளரின் கட்டளைப்படி தஞ்சாவூர் காவற் துறை சூப்பி ரண்டால் இத்தற்காலிக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் வெண்கலச் சிலைகளின் திருட்டுக்களால் நிலவி வருகின்ற அச்சம் காரணமாக காவலர் பாதுகாப்புக்கான ஏற்பாட்டை நிலையாகச் செய்வதற்கான செயல்குறிப்புகளை அரசுக்கு அனுப்புவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் உறுதியளித்துள்ளார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தஞ்சைக் கலைக்கூடத்தில் அரை கோடி ரூபாய் பெருமானமுள்ள விக்கிரங்ககள் இருப்பதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அங்கே நிரந்தரமான காவலர் பாதுகாப்பில்லை. ஒருவரைப் போட்டிருக்கிறதாக இங்கே குறிப்பிட் டார்கள். அது திறந்தவெளியாக இருக்கிறது. கடந்த டிசம்பர் மாதத் தில் அங்குள்ள சிலைகளைச் சிலர் திருட முயற்சித்தார்கள். அது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ, தெரியவில்லை. மேலும் அந்தக் கலைக்கூடத்தில் கலை சம்பந்தமான பல நிகழ்ச்சிகள், கூட்டங்கள் எல்லாம் நடைபெறுகின்றன. அதன் காரணமாகக் கலைக் கூடத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கூடுகிறார்கள். அப்படிக் கூடுகிற போது, அங்கே உள்ள பொருள்களை எல்லாம் அங்கே இருக்கிற காவலர் கள் பாதுகாக்க முடியாத நிலைமையில் அவர்கள் திண்டாடுகிறார்கள். அது மட்டுமல்ல. பகல் நேரங்களில் நூற்றுக்கணக்கான பேர் வந்து சுற்றிப் பார்க்கிறபோது, அந்த சமயத்தில் காவலர்கள்கூடச் சென்று காட்ட முடியாத நிலைமை ஏற்படுவதை மனதில் கொண்டு, இந்த அரை கோடி ரூபாய் பெருமானம் உள்ள விக்கிரகங்கள் சரியான முறையில் பாதுகாக்கப்படுவதற்கான முயற்சியை அரசாங்கம் மேற் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : அங்கேயிருக்கிற விக்கிரகங் களின் மதிப்பை நான் தோராயமாகத்தான் சொன்னேன். விக்கிரகங் களின் மதிப்பு கோடி ரூபாய்க்கு மேல் இருக்கிறது என்பது எல்லோருக் கும் தெரியும். இருந்தாலும்கூட, அங்கே பகலில் 3 பேர்களும் இரவில் 3 பேர்களும் காவல் காக்கிறார்கள். போலீஸ்காரர் ஒருவர் இரவு 11 மணியிலிருந்து காலை 5 மணி வரை காவல் கொடுக்கிறார். அது தாற்காலிகமாகச் செய்யப்பட்ட ஏற்பாடாகும். நிரந்தரமான ஏற்பாடு செய்வதைப் பற்றி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ரிப்போர்ட்

அனுப்ப வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த ரிப்போர்ட் இன்னும் வந்து சேரவில்லை. வந்து சேர்ந்த பிறகு, இதைப்பற்றிப் பரிசீலனை செய்யலாம் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். அப்படிப்பட்ட நிரந்தர மான ஏற்பாடு செய்வதற்கு சிரமம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்தக் காவலர்களுக்குச் சம்பளம் மற்ற வகையான படிகள் எல்லாம் கொடுக்கப் போதிய வசதி இல்லை என்று சொல்லுகிறார்கள். அதற்கு கேட் கலெக்ஷன், டெப்பாசிட் மூலமாக வருகிற வட்டி போன்றவை போதுமான அளவில் இல்லாத காரணத்தால் அப்படிப்பட்ட ஏற்பாடு களை உடனடியாகச் செய்ய முடியவில்லை என்று சொல்லுகிறார்கள். இருந்தாலும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ரிப்போர்ட்டு வந்த பிறகு இது குறித்துப் பரிசீலனை செய்யப்படும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

திரு. ஜி. சுவாமிநாதன்: இன்னொன்றையும் அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அங்கேயுள்ள கலைக்கூடத்தில் பல கலை நிகழ்ச்சிகள் நடக்கின்றன. பெரிய கூட்டங்கள் எல்லாம்கூட அதற்குள் நடக்கின்றன. அப்போது ஆயிரக்கணக்கான மக்கள் அந்தக் கலைக்கூடத்திற்குள் கூடுகிறார்கள். திறந்த வெளி அரங்கில் கூடுகிறவர் களில் யார் வேண்டுமானாலும், எந்தச் சிலையை வேண்டுமானாலும், எடுத்துப் போய்விடுகிற அபாயகரமான நிலைமை இருக்கிறது. எனவே இது குறித்தும் தக்க நடவடிக்கை மேற்கொள்ள அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: இது சம்பந்தமாகப் பரிசீலனை செய்யும் போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் யோசனையும் கவனத்தில் கொள்ளப்படும்.

*Lactone*

*20. *Q.*—THIRU G. SWAMINATHAN: Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether it is a fact that a product by name "Lactone" is being produced experimentally by Madhavaram Dairy Project ; and

(*b*) if so, the details thereof ?

**லாக்டோன்**

திரு. ஜி. சுவாமிநாதன்: மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) மாதவரம் பாற்பண்ணையில் சோதனை அடிப்படையில் ''லாக்டோன்'' என்னும் பெயருடைய பொருள் உற்பத்தி செய்யப் பட்டு வருவது என்பது உண்மையா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. ராமன்: (அ) ஆம்.